
# தமிழ் அறிவு வளாகம்

## வரலாற்றில் ஒரு சதுர அடி!



## தமிழ்ப் பண்பாட்டின் அடையாளம்

> “ உலகின் மிகப்பெரும் தமிழ் ஆவணக் களஞ்சியம்

தமிழ் அச்சுப் பண்பாட்டின் உறைவிடமான ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், தமிழ்ச் சமூகத்தின் பெருமிதங்களில் ஒன்று.

1994இல் நிறுவப்பட்ட இந்நூலகம், இன்று தமிழ் அறிவு வளாகமாக வளர்ச்சி பெற்றுள்ளது.

# தலைமுறைகளுக்கான பெரும் பணி

திருக்குறளின் முதல் அச்சுப் பிரதி தொடங்கி கடந்த 300 ஆண்டுக்காலத் தமிழ் அச்சுப் பண்பாட்டை இந்நூலகம் தொடர்ச்சியாக ஆவணப்படுத்திவருகிறது.

ரோஜா முத்தையா என்கிற தனிநபரின் சேகரிப்பிலிருந்த ஒரு லட்சம் ஆவணங்களுடன் தொடங்கப்பட்ட இந்நூலகம், இன்று ஐந்தரை லட்சம் ஆவணங்களைத் தாண்டி விரிவடைந்துள்ளது.

தமிழ் அறிவுப் பண்பாட்டை எதிர்காலத் தலைமுறைகளுக்காகப் பாதுகாத்துக் கையளிக்கும் பணியில் கடந்த 30 ஆண்டுகளாக ஈடுபட்டிருக்கும் இந்நூலகம், அடுத்த 300 ஆண்டுகளையும் தாண்டி நீடிக்க வேண்டிய பணிகளைக் கருத்தில் கொண்டு **தமிழ் அறிவு வளாகம்** என்ற வரலாற்றுக் கடமையை முன்னெடுத்துள்ளது.



# சுரங்கத்திலிருந்து அரங்கத்திற்கு

சென்னை தரமணியில் மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகத்தில் செயல்பட்டுவந்த இந்நூலகத்தின் கட்டடம், முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2010ஆம் ஆண்டு வழங்கப்பட்டது. தமிழ்ப் பண்பாடு, வரலாறு சார்ந்த மீள்கட்டமைப்புகளில் இந்நூலகம் மேற்கொண்டு வரும் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் விதமாக, தற்போதைய தமிழ்நாடு அரசு வழங்கியுள்ள 30,000 சதுர அடி நிலத்தில் தமிழ் அறிவு வளாகத்தின் கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

03.07.2025 அன்று நடைபெற்ற மெய்நிகர் கால்கோள் விழாவில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள், தமிழ் அறிவு வளாகக் கட்டுமானப் பணியைத் தொடங்கி வைத்தார். இது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக வரலாற்றில் சிறப்புமிக்க தருணமாகும்.

தமிழி எழுத்துகள்

# தமிழ் அறிவு வளாகம்

தமிழ் அறிவு வளாகம் என்னும் பெருங்கனவை நனவாக்க நமக்கு 40 கோடி ரூபாய் தேவை. தமிழ்கூறும் நல்லுலகின் கொடையாளர்கள், பெருநிறுவனங்கள், அறக்கட்டளைகள், தொண்டு நிறுவனங்கள் தமிழ் அறிவு வளாகத்துக்குத் தங்களால் இயன்ற நன்கொடையை வழங்கி வருகின்றனர். தமிழ் அறிவு வளாகத்தைக் கட்டியெழுப்பும் இந்த முயற்சியில் நீங்களும் இணைய வேண்டும் என்று விரும்புகிறோம்.

**"**

## வரும் தலைமுறைக்கான இன்றைய முதலீடு



தொடக்கக் கால அச்சு இயந்திரத்தின் மாதிரி

“

உலகத் தமிழர்களுக்கான மன்றம்



# நமக்கென்று பாதுகாப்பான ஓரிடம்

ஊர்கூடித்தான் தேர் இழுக்கவேண்டும்; சிறுதுளிதான் பெருவெள்ளம். ஒற்றைக் கற்களை ஒவ்வொன்றாகச் சேர்த்துக் கட்டியெழுப்பப்படுவதே பெருங்கோட்டை. தமிழ் அறிவு வளாகமும் அப்படித்தான்.

தமிழ் அறிவு வளாகத்தின் கட்டுமானப் பணிகள், உள்கட்டமைப்பு உட்பட ஒரு சதுர அடிக்குத் தோராயமாக ரூ. 5000 செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கட்டுமானத்தில் உங்களது பங்களிப்பு ஒரு சதுர அடி என்கிற அளவில்கூட இருக்கலாம். எத்தனை சதுர அடிகள் என்பது உங்கள் விருப்பம்.

# கட்டியெழுப்பக் கைகொடுங்கள்!

நீண்ட நெடிய தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றில் நடுகல்லாகிய புரவலர்கள்தான் இன்றும் நினைவில் நிற்கிறார்கள். தமிழ் முன்னெடுத்த “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற பண்பாட்டுப் புரிதலின் முதிர்ச்சிக்கான குறியீடுகூட செங்கல்தான்!

செங்கல் என்பது சிவப்பானது மட்டுமல்ல சிறப்பானதும். அடி மேல் அடி வைத்து தமிழ் அறிவு வளாகத்தைக் கட்டியெழுப்பக் கைகொடுங்கள்!

வாருங்கள்...
எல்லோரும் கைகோத்து

## நமது வரலாற்றை
## நமது காலத்தில் நிறுவுவோம்!



## தமிழ் வாழ்க...

உங்களது பங்களிப்பைச் செலுத்த...

UPI ID: rojamuthaiah@sbi

Roja Muthiah Research Library Trust-Building Fund
Current A/C No. 42625211182
State Bank of India, Tidel Park Branch
4, Canal Bank Road, Taramani, Chennai 600113
Branch Code: 04285
IFS Code: SBIN0004285

அயலகத்தில் வாழ்பவர்கள்
தொடர்பு கொள்ளவும்: 8015312686 (WhatsApp)

தமிழ்
அறிவு
வளாகம்

நூலகம் | அருங்காட்சியகம் | ஆவணக்காப்பகம் | ஆராய்ச்சி | உரையாடல் வெளி

மூன்றாவது குறுக்குச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்,
தரமணி, சென்னை – 600113 | +91 8015312686 | +91 44 22542551
www.rmrl.in | rmrl@rmrl.in